பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 05 2025 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

- பசுமை ஹைட்ரஜன், தூய்மை எரிசக்தி, கலப்பு எரிபொருள் உற்பத்தி ஆகியவற்றில் பிரேசில் முதலீட்டாளர்களுக்கு இந்தியாவில் அதிக வாய்ப்புகள் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

- இந்திய ராணுவத்திற்கான போர் வாகன மற்றும் ஆயுத சோதனை மையத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் டாக்டர் சமீர் காமத் இன்று தொடங்கிவைத்தார்.

- புதுச்சேரி மற்றும் கிருஷ்ணகிரியில் ஆபரேஷன் சிந்தூர் மூவர்ண தேசிய கொடி பேரணி இன்று நடைபெற்றது.

- யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்.

- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று பெங்களூரு - கொல்கத்தா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழை காரணமாக தாமதமாகியுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

**<<<<<>>>>>**

உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு உயர்ந்து வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

பிரேசில் நாட்டில் பயணம் மேற்கொண்டுள்ள அவர், **Saopaulo** நகரில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றிய அவர், விரைவான பொருளாதார வளர்ச்சி, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சர்வதேச நட்புறவு ஆகியவற்றில் இந்தியா சிறப்பாக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள முதலீட்டு வாய்ப்புகளை பிரேசில் முதலீட்டாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

உயிரி எரிவாயு, பசுமை ஹைட்ரஜன், தூய்மை எரிசக்தி, கலப்பு எரிபொருள் போன்றவற்றை போக்குவரத்து எரிபொருளாக பயன்படுத்துவதில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தியா – பிரேசில் இடையேயான நீண்டகால கலாச்சார உறவுகள் பெருமை சேர்க்கும் விதத்தில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையிலான வேளாண் வர்த்தகம், எரிசக்தி மற்றும் மின்னணு தொழில்நுட்ப கூட்டு முயற்சிகளும் மேம்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இந்தியாவில் ஏராளமான முதலீட்டு வாய்ப்புகள் உள்ளதாகவும், உலகின் பல பகுதியில் உள்ள இந்திய வம்வாவளியினர் இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் நீடித்த பொருளாதார வளர்ச்சியை எதிர்காலத்தில் மேம்படுத்துவதற்கு தங்களது பங்களிப்பை செலுத்துமாறும் திரு நிதின்கட்கரி கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

சென்னையை அடுத்த ஆவடியில் உள்ள போர் வாகன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் புதிய போர் வாகன மற்றும் ஆயுத சோதனை மையத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் டாக்டர் சமீர் காமத் இன்று திறந்துவைத்தார்.

போர் வாகன மற்றும் ஆயுத அமைப்பு சோதனை மையத்தில் 26 வகையான சோதனைத்தடங்கள் உள்ளன.

அவை கவச வாகனங்களின் முழுமையான வாகன செயல்திறனை சோதிக்கும் திறன் வாய்ந்தது.

இதன் செயல் திறன் சோதனைகள் போர் வாகனங்கள் மற்றும் ஆயுதங்களை அதன் பயன்பாட்டிற்கு முன்பு சோதிப்பதற்கு உதவிடும் என்று எமது பாதுகாப்புத்துறை செய்தித்தொடர்பாளர் தெரிவிக்கிறார்.

சிறப்பு இயந்திர சோதனை மையம் ஒன்றும் இன்று திறந்துவைக்கப்பட்டது.

அவற்றின் சோதனை வசதிகள் மற்றும் பல்வேறு அம்சங்களும் விளக்கப்பட்டன.

ஆவடி போர் வாகன மற்றும் ஆயுத சோதனை மையத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் ஏ பி ஜே அப்துல் கலாமின் நினைவுச்சின்னமும் திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முக்கிய பிரமுகர்கள், டாக்டர் கலாமுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் டாக்டர் சமீர் காமத்துக்கு தற்போது மேற்கொள்ளப்படும் புதிய திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

அதன் செயல்திறனை அவர் ஆய்வு செய்தார்.

கவச போர் வாகனங்களுக்கான புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று டாக்டர் சமீர் காமத் கேட்டுக்கொண்டார்.

**<<<<<>>>>>>**

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை பிரதமர் திரு நரேந்திர மோடி வெற்றிகரமாக முடித்துள்ளார் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

கோவை குரும்பப்பாளையத்தில் உள்ள தனியார் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்து கொண்டு பேசிய அவர், ராணுவ தளவாடங்களை இறக்குமதி செய்துகொண்டிருந்த இந்தியா, தற்போது ஏற்றுமதி செய்யும் நாடாக உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

***Sound Byte – L. Murugan – 33 Sec.***

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்ட டாக்டர் எல். முருகன், தேசிய கல்விக்கொள்கை அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கு அடித்தளமிட்டுள்ளதாகவும் கூறினார்.

***Sound Byte – L. Murugan – 42 Sec.***

**<<<<<>>>>>>**

தீவிரவாதத்துக்கு எதிராக செயல்படும் இந்தியாவின் உறுதிபாட்டை ஆபரேஷன் சிந்தூர் நிரூபித்திருப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிர்வாகவியல் கல்லூரி ஒன்றின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர்,

தீவிரவாதத்துக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலில், நுட்பமான தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு, அப்பாவி மக்களுக்கு பாதிப்பின்றி துல்லிய தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறினார்.

நாட்டின் பாதுகாப்புக்காக நாம் ஒவ்வொருவரும் பங்களிப்பை செலுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவின் நலனுக்கும், இறையாண்மைக்கும் எதிராக செயல்படும் நாடுகளுக்கு தொடர்ந்து உதவிக்கரம் நீட்ட இயலாது என்று திரு ஜெக்தீப் தங்கர் கூறினார்.

<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை வெற்றிகரமாக முடித்த இந்திய ராணுவத்தின் முப்படையினருக்கு வீர வணக்கம் செலுத்தும் வகையில், மூவர்ண தேசிய கொடி பேரணி புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கே கைலாச நாதன் தலைமையில் இன்று நடைபெற்றது.

துணை நிலை ஆளுநர் தேசிய கொடியை ஏற்றிவைத்து பேரணியை கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இதில், புதுவை பல்கலைக்கழக துணைநிலை ஆளுநர் டாக்டர் பிரகாஷ் பாபு, மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் பொதுமக்களும், மாணவர்களும் இந்த பேரணியில் பங்கேற்றனர்.

தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தலைமையில் மூவர்ண தேசிய கொடி பேரணி இன்று நடைபெற்றது.

இந்த பேரணியை அவருடன் இணைந்து, அக்கட்சியின் தேசிய பொதுக்குழு உறுப்பினர் திரு அண்ணாமலை ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

பிஜேபி தொண்டர்கள், ராணுவ வீரர்கள், பெண்கள் என மூன்று பிரிவுகளாக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பேரணியாக சென்றனர்.

முப்படைகளுக்கும் உலக அளவில் இந்திய நாட்டிற்கு பெருமை தேடி தந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும் பாராட்டு மற்றும் நன்றி தெரிவித்து பேரணியினர் முழக்கமிட்டனர்.

காமராஜர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வழியாக, விளையாட்டு மைதானம் வரை நடைபெற்ற இந்த பேரணியில், பூக்களை தூவி ராணுவத்தினருக்கும், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

பிஜேபியில் மாநில அளவிலான நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் இந்த பேரணியில் பங்கேற்றனர்.

<<<<<>>>>>>

உத்தரப்பிரதேசத்தில் நேரிட்ட இருவேறு சாலை விபத்துக்களில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

முஸாபர்நகர் மாவட்டத்திற்கு உட்பட்ட இரண்டு இடங்களில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<>>>>>>

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய டிரோன் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர்.

உக்ரைனின் வடகிழக்குப் பகுதியில் பேருந்து ஒன்றை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

சம்பவ இடத்தில் மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாகவும், அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் - ரஷ்யா இடையே இஸ்தான்புலில் நேரடிப் பேச்சுக்கள் நடைபெற்று வந்த நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று பெங்களூரு - கொல்கத்தா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழை காரணமாக தாமதமாகியுள்ளது.

பெங்களூருவில் 7.30-க்கு தொடங்குவதாக இருந்த இப்போட்டி மழை பெய்து வருவதால் டாஸ் போடுவதும் தாமதமாகியுள்ளது.

இதன் காரணமாக ஆட்டமும் தாமதமாக தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------------

ஈரானில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் கரண் சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-4, 6-4 என்ற செட் கணக்கில்,இத்தாலியின் **Matteo Covato**–வை வென்றார்.

**<<<<<END>>>>>>**